35. வேறுபடுத்துக. அ) வானிலை மற்றும் காலநிலை. ஆ) மேற்குத் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள்.

காரணம் கூறுக. மலைப்பகுதிகள் சமவெளிகளைவிட குளிரானவை

36. தென்மேற்கு பருவக்காற்று – விவரிக்கவும்.

37. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.

38. இந்தியக் குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளை விவரி.

39. GDP – யை கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளை விவரி.

40. இந்தியாவில் GDP யில் பல்வேறு துனற்களின் பங்கினை விவரி

41. 1910 முதல் 1930 வரையிலான காலக்கோடு வரைந்து 5 முக்கிய நிகழ்வுகளை குறி

42. உலக வரைப்படத்தில் பின்வரும் இடங்களை குறி.

i. கிரேட் பிரிட்டன் ii. இத்தாலி iii. ஜப்பான் iv. பிரேசில் v. துருக்கி

## பகுதி 4 — 2 ×8= 16

43.அ) முதல் உலகப் போருக்கான முக்கியக் காரணங்களை விவாதி (அல்லது)

ஆ) இந்திய காலநிலையில் நான்கு பருவங்களை விரிவாக எழுதவும்

44. அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் பின்வருவனவற்றைக் குறிக்கவும்

i) ஆரவல்லி ii) சோட்டா நாக்பூர் பீடபூமி iii) K2 சிகரம் iv) அந்தமான் நிகோபர் தீவுகள்

v) கொங்கணக் கடற்கரை vi) சுந்தரவனம் vii) கட்ச் வளைகுடா viii) கங்கைச் சமவெளி (அல்லது)

ஆ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் பின்வருவனவற்றைக் குறிக்கவும்

i) காரகோரம் ii) தக்காண பீடபூமி iii) எவரெஸ்ட் iv) இலட்சத் தீவுகள் v மலபார் கடற்கரை vi) குறைவான மழை பெறும் குதி vii) மன்னார் வளைகுடா viii) வடகிழக்கு பருவக்காற்றின் திசை

Maria Anthuvan M

# GHS, Kattukudalore 2021–2022

## சமூக அறிவியல் Revision Exam.

Marks: 100 — 10ஆம் வகுப்பு

நேரம் : 2.30மணி

## பகுதி 1

சரியான விடையைத் தேர்தெடுத்து — 14 ×1=14

1. மார்ன் போர் எதற்காக நினைவு கூறப்படுகிறது?

அ) ஆகாயப் போர் முறை ஆ) பதுங்கு குழி போர்முறை இ) நீர் முழ்கி கப்பல் போர்முறை ஈ) கடற்படை பார்முறை

2. பின்லாந்தைத் தாக்கியதற்காக பன்னாட்டுச் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நாடு

அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா இ) இத்தாலி ஈ) பிரான்ஸ்

3. லத்தீன் அமெரிக்காவுடன் ' அண்டை நாட்டுடன் நட்புறவு' எனும் கொள்கையைக் கடைப்பிடித்த அமெரிக்கக் குடியரசுத்தலைவர் யார்? அ) ரூஸ்வெல்ட் ஆ) ட்ரூமன் இ) உ ரோவில்சன் ஈ) ஐசனோவர்

4. கூற்று: ஆப்பிரிக்காவில் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்கா க ஐரோப்பிய ாடுகள் மேற்கொண்ட முதற்கட்ட முயற்சிகள் ரத்தக்களரியான போர்களில் முடிந்தன.

காரணம் : சொந்தநாட்டு மக்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பு இருந்தது.

அ) காரணம், கூற்று ஆகிய இரண்டும் சரி. ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.

இ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு. ஈ) காரணம் சரி ஆனால் கூற்று தவறு.

5. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்

i) துருக்கியப் பேரரசு, பால்கனில் துருக்கியரல்லாத பல இனமக்களைக் கொண்டிருந்தது.

ii) துருக்கி மையநாடுகள் பக்கம் நின்று போரிட்டது.

iii) பிரிட்டன் துருக்கியைத் தாக்கி கான்ஸ்டாண்டிநோபிளைக் கைப்பற்றியது.

iv) சூயஸ்கால்வாயைத் தாக்க துருக்கி மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.

அ) i), ii) ஆகியன சரி ஆ) i), iii) ஆகியன சரி இ) iv) சரி ஈ) i), ii), iv) ஆகியன சரி

6. பாக் நீர் சந்தி மற்றும் மன்னார் வளைகுடா ………………ஐ இந்தியாவிடமிருந்து பிரிக்கிறது.

அ) கோவா ஆ) மேற்கு வங்காளம் இ) இலங்கை ஈ) மாலத்தீவு

7. மேற்கத்திய இடையூறுகளால் மழைப் பொழிவைப் பெறும் பகுதி ____

அ)தமிழ்நாடு ஆ)கேரளா இ)பஞ்சாப் ஈ) மத்திய பிரதேசம்

8. பழைய வண்டல் படிவுகளால் உருவான சமவெளி …… அ) பாபர் ஆ) தராய் இ) பாங்கர் ஈ) காதர்

9. பொருந்தாத விடையைத் தேர்வு செய்க. ஓதக்காடுகள் இதனைச் சுற்றி காணப்படுகிறது.

அ) பாலைவனம் ஆ)கங்கை பிரம்மபுத்தரா டெல்டா இ)கோதாவரி டெல்டா ஈ)மகாநதி டெல்டா

10. பின்வருவனவற்றுள் எந்த உரிமை அம்பேத்கர் அவர்களால் 'இந்திய அரசியலமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா" என விவரிக்கப்பட்டது?

அ) சமய உரிமை ஆ) சமத்துவ உரிமை இ) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை ஈ) சொத்துரிமை

11. மாறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி. அ) சமத்துவ உரிமை ஆ) சுரண்டலுக்கெதிரான உரிமை இ) சொத்துரிமை ஈ) கல்வி மற்றும் கலாச்சார உரிமை

12. நடுவன் அரசின் அரசியலமைப்பின் தலைவர்…………ஆவார்.

அ) குடியரசுத் தலைவர் ஆ) தலைமை நீதிபதி இ) பிரதம அமைச்சர் ஈ) அமைச்சர்கள் குழு

13. GDP–ல் எந்த துறை மூலம் அதிகமான வேலைவாய்ப்பு ஏற்படுகிறது?

அ) வேளாண்துறை ஆ) தொழில்துறை இ) பணிகள் துறை ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

14. வேளாண் பண்டங்களின் உற்பத்தியில் இந்தியா –––அதிகம க உற்பத்தியாளர்.

அ) 1 வது ஆ) 2 வது இ) 3 வது ஈ) 4 வது

## பகுதி 2

எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும் . வினா எண் 28க்கு கட்டாயம் விடையளிக்கவும். 10×2=20

15. பதுங்குக் குழிப் போர்முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன?

16. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

17. பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாணமையின் மீது எத்தகையத் தாக்கத்தை ஏற்படுத்தியது?

18. ஒட்டாவா பொருளாதார உச்சி மாநாட்டின் முக்கியத்துவம் குறித்து விவாதிக்கவும்.

19. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களைக் கூறுக

20. இந்திய திட்ட நேரத்தின் முக்கியத்துவம் பற்றி கூறுக.

21. பருவமழை வெடிப்பு என்றால் என்ன?

22.'ஜெட் காற்றோட்டங்கள்" என்றால் ன்ன?

23. நிதி மசோதா என்றால் என்ன?

24. இந்திய அரசியலமைப் பல் வழங்கப்படும் அடிப்படை உரிமைகள் பட்டியலிடுக

25. இந்தியாவின் செம்மொழிகள் எவை?

26. தனிநபர் வருமானம் என்றால் என்ன?

27. நாட்டு வரும னம் – வரையறு

28. தக்காண பீ பூமி – குறிப்பு வரைக.

## பகுதி 3

எவை யனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும் . வினா எண் 42க்கு கட்டாயம் விடையளிக்கவும் 10×5=50

9. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் ஷரத்துக்களை கோடிட்டு காட்டவும்.

30. பன்னாட்டுச் சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக. அதன் தோல்விக்கான காரணங்களையும் குறிப்பிடுக.

31. கோடிட்ட இடங்களை நிரப்புக

i. –––––ஆம் ஆண்டில் லொகர்னோ உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது

ii. –––––என்பது பிரிட்டிஷ் காலநிலை என்றும் அழைக்கப்படுகிறது.

iii. பழைய வண்டல் படிவுகளால் உருவான சமவெளி ………………….

iv. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் –––––– ஆகும்.

v. ––––––– மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும்.

32. உலகப் போர்களுக்கிடைப்பட்ட காலத்தில் (1919–39) இந்தியாவில் காலனிய நீக்கச் செயல்பாடுகள் எவ்வாறு நடைபெற்றன என்பதனைக் குறித்து வரிசையாக விவரிக்கவும்.

33. இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரி.

34. இந்தியாவின் தீவுக் கூட்டங்கள் பற்றி விவரி.